1982 மார்ச் 4]

(ஆ) சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதி மன்றங்கள் (திருத்த) ரத்து சட்ட முன்வடிவ, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் வழக்கு நீதிமன்றம், மாநிலச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் (திருத்த) ரத்து சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(8) வரவு-செலவுத் திட்டம், 1982-83 பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இம் மாமன்றத்தில் பொணமல்லூர் தொகுதியின் குறைபாடுகளைப் பற்றியும், அங்கே நடந்திருக்கின்ற ஊழல்களைப் பற்றியும் இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்காக பொணமல்லூர் தொகுதியின் சார்பாக முதல் கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலே முதியோர்களுக்கும், விதவைத் தாய்மார்களுக்கும் அரசு உதவித் தொகை அளித்துக் கொண்டு வருகிறது. மேலும் தீபாவளிப் பண்டிகை நாளிலும், பொங்கல் பண்டிகை நன்னாளிலும் சேலை, வேட்டிகள் கொடுக்கிறோம். ஆனால் பொணமல்லூர் தொகுதியில் ஆர்.ஐ.-யாக வந்திருக்கின்ற சங்கரன் என்பவர், மேற்படி நாட்களில் சேலை, வேட்டி கொடுக்கின்றபோது முதியோர்களிடமும் விதவைத் தாய்மார்களிடமும் ரூபாய் ஒன்றிலிருந்து ஐந்து ரூபாய் வரையில் கொடுத்தால் தான் அரசு கொடுக்கும் உதவித் தொகையை கொடுக்க முடியும் என்று சொல்கிறார். இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், தாசில்தார் அவர்களுக்கும், ஆர்.டி.ஓ. அவர்களுக்கும் 24.1.82 அன்று மனுக் கொடுக்கப் பட்டுள்ளது. 25-2-82-ஆம் தேதியன்று தாசில்தார் அவர்கள் பொணமல்லூருக்கு விஜயம் செய்யும் நேரத்தில், ஆர்.ஐ. அவர்கள் முன்னிலையிலும் தாசில்தார் அவர்களிடமும் ஒரு விதவைத் தாயாரான சாரதம்மாள் என்பவர் நான் பொங்கல் பண்டிகைக்குச் சேலை வாங்கும்பொழுது ஒரு ரூபாய் லஞ்சம்